Eelam Tamil Association Victoria (Inc)
(Established 1978)
ஈழத் தமிழ்ச் சங்கம் விக்ரோறியா(இணை)
(ஆரம்பம் 1978)
ABN: 91 718 368 666 Registration No.: A0007477N
P O Box 4337, Burwood East LPO, Burwood East, Victoria 3151, Australia

# ஈழத் தமிழ்ச் சங்கம் - முத்தமிழ் விழா 2018
## பேச்சு, இசை, கட்டுரை, உரையாடல் போட்டிக்கள் பற்றிய விபரங்கள்

**போட்டி நாள் : ஞாயிற்றுக்கிழமை, 13.05.2018, மதியம் 1:00 மணி - மாலை 6:00 மணி**
**போட்டி இடம் : Wesley College, 620, High Street Road, Glen Waverley, 3150**

1. இப்போட்டிகளில், தற்போது அவுஸ்திரேலிய பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் சிறுவர்கள் யாவரும் பங்குபற்றலாம். போட்டிகளில் பங்குபற்றுவதற்கென்று தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்ப படிவங்களிலேயே விண்ணப்பம் செய்தல் வேண்டும். விண்ணப்ப படிவம் முழுமையாக நிரப்பப்பட வேண்டும்.

2. தமிழ்ப் பாடசாலைகள் எதிலும் மாணவர்களாய் இல்லாத சிறுவர்களும் (விக்டோரியா மாநிலம் தவிர்ந்த வேறு மாநிலங்களில் வசிக்கும் சிறுவர்கள் உட்பட) இப்போட்டிகளில் பங்குபற்றலாம். இவர்கள் பின்வரும் முகவரிக்கு அல்லது மின்அஞ்சல் ஊடாக தமது விண்ணப்ப படிவங்களை அனுப்பி வைக்கலாம்:

i. Students applications can be submitted via the following:

**இணையத்தளம் (Website):** http://competition.etatamilschool.org/#/home
**மின்அஞ்சல் (ETA Tamil school email address):** competition@etatamilschool.org

ii. ***தபால் முகவரி (Postal Address):***

ETA Muththamil Villah Competition - 2018
ETA Victoria
P O BOX 4337
Burwood East LPO, Burwood East, Vic 3337

iii. தொலைபேசி :0429 857 893 or 0408 360 865

3. **ஒரு பிள்ளைக்கு** விண்ணப்பக் கட்டணம் 10.00 வெள்ளிகள் மட்டுமே. இக்கட்டணத்துடன் இசை, பேச்சு, கட்டுரை, கலந்துரையாடல் போட்டிகளில் பங்கு கொள்ளலாம்.

4. **விண்ணப்ப முடிவுத் திகதி 30-04-2018**

**எதுவித காரணம் கொண்டும் போட்டி நாள் அன்று விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளபடமாட்டாது.**

5. **பிரிவுகளின் விபரங்கள்**

| பிரிவு | வயது | பிறந்த திகதி |
|---|---|---|
| மழலையர் பிரிவு | 3 - 5 வயதுக்கு உட்பட்டோர் | 01-04-2013 - 31.03.2015 இடையில் |
| பாலர் பிரிவு | 5 - 6 வயதுக்கு உட்பட்டோர் | 01.04.2012 - 31.03.2013 இடையில் |
| ஆரம்பப் பிரிவு | 6 - 8 வயதுக்கு உட்பட்டோர் | 01.04.2010 - 31.03.2012 இடையில் |
| கீழ்ப் பிரிவு | 8 - 10 வயதுக்கு உட்பட்டோர் | 01.04.2008 - 31.03.2010 இடையில் |
| மத்திய பிரிவு | 10 -12 வயதுக்கு உட்பட்டோர் | 01.04.2006 - 31.03.2008 இடையில் |
| மேற் பிரிவு | 12 -14 வயதுக்கு உட்பட்டோர் | 01.04.2004 - 31.03.2006 இடையில் |
| அதிமேற் பிரிவு | 14 வயதுக்கு மேற்பட்டோர் | 01.04.2004 க்கு முன்னர் |

**6. பேச்சுப் போட்டி** (பேச்சுப் போட்டிக்கான தேர்வுப் படிமானம் இணைக்கப்பட்டுள்ளது)

**மழலையர் பிரிவு, பாலர் பிரிவு, ஆரம்பப்பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு அதிமேற்பிரிவு** ஆகிய எல்லாப் பிரிவுகளுக்கும் பேசுவதற்கான விபரங்கள் தயாரிக்கப்பட்டு இங்கு இணைக்கப்பட்டுள்ளன.

**7. இசைப் போட்டி** (இசைப் போட்டிக்கான தேர்வுப் படிமானம் இணைக்கப்பட்டுள்ளது)

**மழலையர் பிரிவு, பாலர் பிரிவு ஆரம்பப்பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு அதிமேற்பிரிவு** ஆகிய எல்லாப் பிரிவுகளுக்கும் உரிய பாடுவதற்கான விபரங்கள் தயாரிக்கப்பட்டு இங்கு இணைக்கப்பட்டுள்ளன. குறித்த பாடல்களை மனனம் செய்து இசையோடு பாடுதல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட ராகத்திலும் தாளத்திலும் மட்டுமல்லாது வேறு ராகத்திலும் தாளத்திலும் கூட இசையமைத்துப் பாடலாம். சுருதிப் பெட்டி மட்டுமே பயன் படுத்தப்படலாம்.

<u>**முக்கிய குறிப்பு**</u>: இம்முறை அதிமேற்பிரிவுக்கான பாட்டு போட்டியில் தனிப்பட்ட மாணவர்கள் பங்குபற்றமுடியாது. இப்பிரிவுக்கான போட்டிக்கு ஏதாவது ஒரு பாடசாலையில் (சங்கீத பாடசாலை அல்லது தமிழ் பாடசாலை) இருந்து மட்டுமே 8 தொடக்கம் 10 பேர் வரையில் கூட்டாக பங்குபற்றலாம். இப்போட்டிக்கான நேரம் 8 தொடக்கம் 10 நிமிடங்கள் வரை மட்டுமே. பத்து நிமிடத்துக்கு மேல் போகும் எந்த குழுவும் போட்டியில் இருந்து நிராகரிக்கப்படுவர். பங்குபற்றும் குழுக்களில் தேவை ஏற்படின் 10 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களையும் சேர்த்துக்கொள்ளலாம்.

**கட்டுரைப் போட்டி** (கட்டுரைப் போட்டிக்கான தேர்வுப் படிமானம் இணைக்கப்பட்டுள்ளது. இப்போட்டி கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு ஆகிய பிரிவுகளுக்கு மட்டுமே நடாத்தப்படவுள்ளது. எல்லாப் பிரிவுகளுக்கும் உரிய தலைப்புகள் தயாரிக்கப்பட்டு இங்கு இணைக்கப்பட்டுள்ளன.

**8. கலந்துரையாடல் போட்டி** (கலந்துரையாடல் போட்டிக்கான தேர்வுப் படிமானமும் இணைக்கப்பட்டுள்ளது)

இப்போட்டி **மேற்பிரிவு அதிமேற்பிரிவு** ஆகிய பிரிவுகளுக்கு மட்டுமே நடாத்தப்படவுள்ளது. உரிய விபரங்கள் இங்கு இணைக்கப்பட்டுள்ளன.

**Eelam Tamil Association Victoria (Inc)**
(Established 1978)
**ஈழத் தமிழ்ச் சங்கம் விக்ரோறியா(இணை)**
(ஆரம்பம் 1978)
ABN: 91 718 368 666 Registration No.: A0007477N
P O Box 4337, Burwood East LPO, Burwood East, Victoria 3151, Australia

# பேச்சுப் போட்டி

## மழலையர் பிரிவு - 5 வயதுக்கு கீழ்ப்பட்டோர்

(தொடங்கும் நேரம் மதியம்1:00 மணி)

## தமிழ்

தமிழ் எங்கள் தாய் மொழியாகும்
எமது தாய் மொழியான தமிழைப் பேணிப் பாதுகாப்பது
எங்கள் எல்லோரதும் கடமையாகும்
சிறுவர்களாகிய நாம்; தமிழைக் கற்பதாலும்
வீட்டில் தமிழில் பேசுவதாலும்
தமிழைப் பாதுகாக்கலாம்.

தமிழ் கற்போம்,
தமிழருடன் தமிழில் பேசுவோம்
தமிழர்களாய் வாழ்வோம்
நாம் தமிழர் என்று பெருமையுடன் சொல்வோம்.
வாழ்க தமிழ்!

**நன்றி, வணக்கம்.**

# பேச்சுப் போட்டி

**பாலர் பிரிவு: 5 - 6 வயதுக்கு உட்பட்டோர்**

(தொடங்கும் நேரம் மதியம் 1:00 மணி)

## பெற்றோரின் சிறப்பு

எமது பெற்றோர் எமக்காகவே வாழ்கிறார்கள்.

நாம் பிறந்த நாள் முதல் எமக்கு வேண்டிய எல்லாவற்றையும் செய்கின்றார்கள்.

தங்கள் சுக-துக்கங்களை எல்லாம் மறந்து எங்களுக்காக அயராது உழைக்கின்றார்கள்.

தாங்கள் எங்களுக்காக படும் கஷ்டங்கள் கூட எங்களுக்கு தெரியக்கூடாது என்று மறைத்துக் கொள்வார்கள்.

தாயும் தந்தையும் தங்கள் பிள்ளைகளுக்கு வேண்டிய பணிகளை தங்களுக்கே உரிய தனிப்பட்ட பாணியில் வித்தியாசமாக செய்வார்கள்

அவர்கள் எங்களுக்கு அன்பு காட்டும் முறையிலும் கூட வித்தியாசங்களைக் காணலாம்.

அனால், எமது பெற்றோரின் ஒரே குறிக்கோள் எமது நலன் மட்டுமே.

எனவே, எம்மை கண்ணும் கருத்துமாக வளர்த்து படிக்க வைத்து, சமூகத்தில் பெரியவர்களாக்கும் எமது பெற்றோரை, அவர்களது வயோதிப காலத்தில்

பராமரிப்பது எமது தலையாய கடமையாகும்.

**நன்றி, வணக்கம்.**

# <u>பேச்சுப் போட்டி</u>

**<u>ஆரம்ப பிரிவு: 6 - 8 வயதுக்கு உட்பட்டோர்</u>**

<u>(தொடங்கும் நேரம் மதியம்1:00 மணி)</u>

## திருக்குறள்

தமிழிலுள்ள அரிய நூல்களுள் திருக்குறளும் ஒன்றாகும் அதை எழுதியவர் திருவள்ளுவர்.

திருக்குறள் இரண்டு அடிகள் கொண்ட பாடல்களால் அமைந்தது. திருக்குறளில் ஆயிரத்து முன்னூற்று முப்பது பாடல்கள் உள்ளன. இவை அறம், பொருள், இன்பம் என மூன்று பாகங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளன.

'***அகர முதல எழுத்தெல்லாம் ஆதி***
***பகவன் முதற்றே உலகு.***'
இது முதலாவது திருக்குறள். இக்குறள் கடவுள் வாழ்த்தாக அமைகிறது. எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை முதலாக உடையன, அதேபோல, உலகம் கடவுளை முதலாக உடையது என்பது இதன் பொருள் .

'***கற்க கசடறக் கற்பவை கற்றபின்***
***நிற்க அதற்கு தக***' - என்பது கல்வி பற்றி கூறும் குறல்களில் ஒன்றாகும். கற்பதைப் பழுதின்றிக் கற்க. கற்றதன் பின்பு கற்றதற்கு அமைய ஒழுகுக, என்பது இந்த பாடலின் பொருளாகும்.

'***நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது***
***அன்றே மறப்பது நன்று.***' - ஒருவர் செய்த நன்றியை நாம் மறக்கக்கூடாது. ஆனால், ஒருவர் செய்த தீமையை அன்றே மறந்து விடுதல் நன்று, என்று அறிவுரை கூறுகிறது இந்தக் குறள்.

'***இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண***
***நன்னயம் செய்து விடல்.***' - தீமை செய்தவரைத் தண்டிக்கச் சிறந்த வழி அவர்கள் வெட்கம் அடையும்படி நன்மை செய்தலே, என்கிறது இக்குறள்.

இவ்வாறு குறள்கள் எல்லாம் எங்களுக்கு நல்வழி காட்டுகின்றன. அதனால் திருக்குறள் அறநூல், 'தமிழ் மறை' என்றெல்லாம் போற்றப்படுகின்றது.

**நன்றி, வணக்கம்.**

# பேச்சுப் போட்டி

## கீழ்ப் பிரிவு: 8 - 10 வயதுக்கு உட்பட்டோர்

(தொடங்கும் நேரம் மதியம்1:00 மணி)

# தமிழ்நாடு

தமிழ்நாடு, இந்தியாவில் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமாகும். அங்கு தமிழ்மொழி, தமிழர் கலாச்சாரம். தமிழர் பண்பாடு, தமிழர் கலைகள் எல்லாம் பேணப்படுகின்றன.

தமிழரின் அன்றாட வாழ்விலே, அவர்களின் தனித்துவத்தை நாம் காணலாம். உணவு, உடை, கலைகள் போன்றவை மட்டுமல்ல, பேணும் விழுமியங்கள், வாழ்க்கைமுறை, விழாக்கள், திருமணமுறை, மரணச்சடங்கு போன்றவையும் தனித்துவமானவை.

அறிஞரைப் போற்றுதல் தமிழர் பண்புகளில் ஒன்று. இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகவுள்ளது சென்னையில் உள்ள 'வள்ளுவர் கோட்டம்'. இது திருவள்ளுவரின் நினைவாக அமைக்கப்பட்ட மண்டபம்.

சிறந்த அறிஞர்களை மதிக்கும் பண்பை கன்னியாகுமரியில் இருக்கும் இன்னொரு நினைவு மண்டபத்திலும் காணலாம். கடலின் உள்ளே ஒரு கற்பாறை. அதிலே ஒரு நினைவு மண்டபம். அது உலக புகழ் பெற்ற சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபம்.

திருவள்ளுவர் சிலை ஒன்று கன்னியகுமாரியிலும் உண்டு. சில ஆண்டுகளுக்கு முன்புதான் அது அமைக்கப்பட்டது. அந்தச் சிலை 133 அடி உயரம் உள்ளது.

மகாத்மா காந்திக்கும் அங்கு சிலை அமைக்கப்பட்டுள்ளது. அவர் தமிழர் அல்லர். ஆயினும் அவர் ஒரு இந்தியப் பெரியார். இது தமிழர்களின் கலாச்சாரத்துக்கு இன்னுமொரு எடுத்துக்காட்டாகும். பெரியோரை மதித்தல் மட்டுமல்ல, அனைத்து மதங்களையும் மதித்தலும் தமிழர் பண்பு.

இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர், எல்லோரும் சேர்ந்து வாழும் நாடு, தமிழ்நாடு. அதனால், சைவ, வைணவ ஆலயங்கள் மட்டுமல்ல, கிறிஸ்தவ தேவாலயங்களும், இஸ்லாமிய பள்ளிவாசல்களும் அங்கு உள்ளன.
அன்னை வேளாங்கன்னி தேவாலயம் கிறிஸ்தவர்களின் புகழ் பெற்ற ஆலயமாகும். அதேபோல, நாகூரில் உள்ள தர்கா பள்ளிவாசல் பிரபல்யமான இஸ்லாமிய வழிபாட்டு தலமாகும்.
தமிழ்நாட்டில், இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், இஸ்லாமிய பள்ளிவாசல்கள் எல்லாம் உள்ளன. இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர் யாவரும் இணங்கி சமாதானமாக வாழ்வதை இது காட்டுகிறது. தமிழரின் பரந்த மனப்பாங்கையும் இவை எடுத்துக்காட்டுகின்றன.

**நன்றி, வணக்கம்.**

Eelam Tamil Association Victoria (Inc)
(Established 1978)
ஈழத் தமிழ்ச் சங்கம் விக்ரோறியா(இணை)
(ஆரம்பம் 1978)
ABN: 91 718 368 666 Registration No.: A0007477N
P O Box 4337, Burwood East LPO, Burwood East, Victoria 3151, Australia

# பேச்சுப் போட்டி

## மத்திய பிரிவு: 10 - 12 வயதுக்கு உட்பட்டோர்

(தொடங்கும் நேரம் மதியம்1:00 மணி)

## தமிழரின் சிற்பக்கலை

முற்காலத்திலே தமிழ் மன்னர்கள் தமிழ்நாட்டை ஆட்சி செய்தனர். அவர்கள் 'சங்கம்' அமைத்து தமிழ் வளர்த்தார்கள். அப்படியான சங்கம் 'தமிழ் சங்கம்' எனப் பெயர் பெற்றது.

தமிழ்ச் சங்கங்கள் மூலம் தமிழ் மன்னர்கள் தமிழ் புலவர்களை ஆதரித்தனர். புலவர்கள் தமிழிலே செய்யுள்களும் காப்பியங்களும் எழுதினர். அவைதான் சங்ககால இலக்கியங்கள் என இன்றும் புகழப்படுகின்றன.

தமிழ் மன்னர் காலம் தொடக்கம், தமிழரின் கலைகளும் வளர்ந்தன. இயல், இசை, நாடகம், பல வகையான வாத்தியங்கள், கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை போன்றவை எல்லாம் தமிழரின் தனித்ததுவத்தைக் காட்டும் கலைகள். அவை யாவும் காலத்தால் அழியாத கலைகள்.

தமிழரின் கட்டடக்கலை, சிற்பக் கலை மிகவும் சிறந்தன. இவை தமிழ் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் அழகு தருகின்றன. அவற்றின் சிறப்பை பல ஆலயங்களில் இன்றும் காணலாம்.

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலின் நாற்புறங்களிலும் அழகிய உயர்ந்த கோபுரங்கள் உண்டு. அவற்றில் அழகு தரும் பல ஆயிரம் சிற்பங்களும் உண்டு.

மதுரை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்திய வரலாறு உடையது. சிலப்பதிகாரம் கூறும் கண்ணகி கதையுடன் தொடர்புடையது. தமிழ் மொழி, தமிழர் கலைகள், தமிழர் பண்பாடு ஆகியவை அங்கு வளர்ந்தன.

பண்டைய தமிழரின் சிற்பக் கலைத்திறனை அங்கு காணலாம். கருங்கல்லைச் செதுக்கிச் செய்த சிற்பங்கள் பல ஆயிரம். கருங்கல்லில் செதுக்கி அமைத்த தூண்கள் பல நூறு. தட்டினால் இசை ஒலியைத் தரும் தூண்கள் அவை. காலத்தால் வென்று நின்று பழந்தமிழரின் கதை சொல்லும் கலைச் செல்வங்கள் அவை!

(மறுபக்கம் பார்க்கவும்

தமிழ் மன்னர்களின் தலை நகராக விளங்கிய இன்னொரு ஊர் தஞ்சாவூர். தஞ்சாவூருக்கே தனித்துவமான சித்திரக்கலை ஒன்று உண்டு. அது தஞ்சாவூரின் பழமை வாய்ந்த கலைச் செல்வம்.

தமிழ் நாட்டின் திருச்சி நகரில் அழகிய திருவரங்கநாதர் கோவில் உள்ளது. இருபத்தொரு உயர்ந்த கோபுரங்கள் உள்ள கோயில் அது. ஒவ்வொரு கோபுரத்திலும் ஆயிரம் ஆயிரம் சிற்பங்கள். இது எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கோயில்.

தமிழரின் பண்டைய கலைத்திறனைக் காட்டும் இன்னொரு இடம் மாமல்லபுரம். பண்டைத் தமிழரின் சிற்பக் கலையின் சிறப்பையும் கலை நுட்பத்தையும் அங்கு நாம் இன்றும் காணலாம்.

இன்னும் எத்தனை கோபுரங்கள்! எத்தனை சிற்பங்கள்! தமிழ் நாட்டில் எங்கு சென்றாலும் அவற்றை நாம் காணலாம். அவை எல்லாம் பழந்தமிழரின் கலைத்திறனை இன்றும் பறை சாற்றி காட்டுகின்றன.

**நன்றி, வணக்கம்.**

# பேச்சுப் போட்டி

**மேற் பிரிவு: 12 - 14 வயதுக்கு உட்பட்டோர்**

(தொடங்கும் நேரம் மதியம்1:00 மணி)

## விபுலானந்த அடிகள்

இருபதாம் நூறாண்டின் முற்பகுதியில் தமிழீழம் தோற்றுவித்த சான்றோருள் ஈடிணையற்ற பேரறிஞராக விளங்கியவர் விபுலானந்த அடிகள். அவர் ஈழத்தவராயினும் தமிழுலகம் கண்ட பேரறிஞர் என்ற பெருமையோடு திகழ்ந்தவர்; உலகம் போற்றும் முத்தமிழ் வித்தகராகவும் புகழ் பெற்றவர்; பகுத்தறிவு போராளியாக ஏழை எளிய மக்களின் ஏற்றத்திற்கும் உழைத்தவர். அவரது ஆய்வுகளும் பணிகளும் பற்பல படிகளில் அவரை ஏற்றின; காலத்தால் அழியாத சிறந்த படைப்புகளையும் தந்தன.

ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றிரண்டாம் ஆண்டு மார்ச் மாதம் இருபத்தொன்பதாம் நாள் (29.03.1892) மட்டக்களப்பிலுள்ள காரைதீவிலே விபுலானந்தர் பிறந்தார். அவரது தாயார் கண்ணம்மா; தந்தையார் சாமித்தம்பி. அவருடைய இயற்பெயர் மயில்வாகனன். மிக இளமையிலேயே தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேறினார்.

அவர் உயர்கல்வி கற்று, ஆசிரியராகப் பணி புரிந்தார். பின்னர் கொழும்பில் ஆசிரியப் பயிற்சி பெற்று, பயிற்றப்பட்ட ஆசிரியரானார். அவர் தனது 25வது வயதில் அறிவியல் ஆசிரியராகப் பணிபுரியும் பொழுது லண்டன் பல்கலைக்கழக அறிவியற் பட்டமும் பெற்றார். ஆயிரத்துத் தொளாயிரத்து இருபதாம் (1920) ஆண்டில் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் முதல்வராகி அளப்பரிய தொண்டாற்றினார்.

இளமையில் அவரது உள்ளம் துறவறத்தை நாடியதால், தனது முப்பத்திரண்டாவது துறவறம் மேற்கொண்டார். அன்றுமுதல் அவரது பெயர் விபுலானந்த அடிகள் ஆயிற்று. துறவறத்தின் பயனாக இறைநெறித் தத்துவங்களைக் கற்றார். இறைநெறியையும் தமிழ்மொழியையும் வளர்க்க பள்ளிகளை அமைத்தார். ஏழை, ஏதிலி மாணவர்கள் ஏற்றம் பெறுவதற்கு

அவரது பள்ளிகளில் தளம் அமைக்கப்பட்டது. அம்மாணவர்களுக்கு பூரண இலவசக் கல்வி வழங்கினார்.

இறைநெறி, மொழி, தமிழிசை, கீழைத்தேய மேலைத்தேய நாடகங்கள், பழம்தமிழ் நூல்கள் முதலியவற்றை அவர் துருவித்துருவி ஆராய்ந்தார். ஆய்வுகளின் பயனாக ஆங்கிலவாணி, மதங்கசூளாமணி, யாழ்நூல் முதலிய நூல்கள் அவரால் எழுதப்பட்டன. அடிகளார் தமிழுக்குச் செய்த தொண்டுகள் யாவற்றிலும் சாலச் சிறந்ததும் காலத்தால் அழியாததும் அவர் எழுதிய யாழ்நூலே எனலாம். இவர் ஆயிரம் நரம்பு யாழின் கணக்கினைக் கண்டறிந்து, அதனை மீண்டும் அமைப்பதற்கு வேண்டிய குறிப்புகளையும் யாழ்நூலில் எழுதியுள்ளார். இந்நூல் தமிழுக்குக் கிடைத்த அரும்பெருஞ் செல்வமாகும்.

அடிகளாரின் கல்வித்திறனும், அறிவுத்தெளிவும், துறவறத்தின் பெருமையும், யாழ்நூலும் அவரது புகழுக்குக் முக்கிய காரணிகள் எனலாம். அவற்றுக்கு இணையாக அவர் புரிந்த ஆசிரியப்பணியும் சமூகப் பணியும் குறிப்பிடத்தக்கவை. தம் பேரறிவால் தமிழ்நாட்டிலுள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதலாவது தமிழ்ப் பேராசிரியர் என்ற சிறப்பினைப் பெற்றார். அவர் தம் இறுதி மூச்சு வரையும் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராய் அளப்பரிய பணியாற்றினார். காரைதீவிலுள்ள சாரதா வித்தியாலயம், திருகோணமலையில் உள்ள இந்துக்கல்லூரி உள்ளிட்ட பல பள்ளிகளை அவர் நிறுவினார். அவை அவரது அழியா அடையாளங்களாக இன்றும் திகழ்கின்றன.

அவர் 1947அம் ஆண்டு யூலை மாதம் 19ஆம் நாள் (19.07.1947) இயற்கை எய்தினார்.

**நன்றி, வணக்கம்.**

# பேச்சுப் போட்டி

## அதி மேற் பிரிவு: 14 வயதுக்கு மேற்பட்டோர்

# தமிழர் வீரம்

தமிழர்களின் வீரம் நிறைந்த வரலாற்றை இலக்கியங்களும் கல்வெட்டுகளும் கூறுகின்றன. புறநானூறு என்ற சங்ககால இலக்கியம் தமிழர்களின் வீரத்தைக் கூறும் பழைய தமிழ் இலக்கியமாகும். சேரர், சோழர், பாண்டியர் ஆகியோர் மூவேந்தர் என்று பொற்றப்பட்டனர். இந்த மூன்று வம்சங்களிலும் பலம் வாய்ந்த மன்னர்கள் தோன்றினார்கள். அவர்களின் வீரதீரச் செயல்கள் இன்றும் ஆச்சரியத்தை அளிப்பனவாக உள்ளன. இந்தவகையில் சோழ வம்சத்தைச் சேர்ந்த எல்லாளன், ராஜராஜன், ராஜேந்திரன் ஆகியோரின் வீரம் பற்றி இங்கு ஆராய்வோம்.

**எல்லாளன்**

கி. மு. 235ஆம் ஆண்டில் பிறந்த எல்லாளன், கி. மு. 205 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்தான்.அப்போது அசேலன் என்ற சிங்கள மன்னன் இலங்கையை ஆட்சி செய்துகொண்டிருந்தான். எல்லாளன் அசேலனை வென்று, அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு 44 வருடங்கள் ஆட்சி செய்தான். தமிழர்களையும், சிங்களவர்களையும் தனது இரு கண்களாகக் கருதினான். இந்து சமயத்தையும், பௌத்த சமயத்தையும் சமமாக மதித்தான். நீதி நெறி தவறாது ஆட்சி செய்தான். இதனால் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் எல்லாளன் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தனர்.

இக்கால கட்டத்தில் கவந்தீசன் என்ற சிங்கள மன்னன் இலங்கையின் தென்-பகுதியான உறுகுணை இராட்ச்சியத்தை ஆட்சி செய்தான். இவனுக்கு கைமுனு, சத்ததீசன் ஆகிய இரண்டு பிள்ளைகள் இருந்தனர்.

கைமுனு, எல்லாளன் மீது படையெடுக்குமாறு தந்தையை வற்புறுத்தினான். எல்லாளனின் பலத்தையும், பண்பையும் அறிந்த கவன்தீசன் அதற்கு மறுத்தான். தந்தையை கோழை என்று கருதிய கைமுனு பெண்கள் கழுத்தில் அணியும் அட்டியல் ஒன்றை தந்தையிடம் கொடுக்குமாறு வீரன் ஒருவனை அனுப்பினான். இதனால் கோபம் கொண்ட கவந்தீசன் "அந்த துட்டனைக் கைது செய்யுங்கள்" என்று கட்டளையிட்டான். கைமுனு மலைநாட்டிற்கு ஓடி ஒளித்தான். தந்தையால் துட்டன் என்று அழைக்கப்பட்டமையால்,

அவன் பெயர் துட்டகைமுனு என மாறியது. தந்தை இறந்ததும் சத்ததீசன் அரசனானான். துட்டகைமுனு தம்பியுடன் சண்டையிட்டு வென்று ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றினான்.

எல்லாளனை வெல்லவேண்டும் என்ற வெறியினால் துட்டகைமுனு அனுராதபுரத்தின் மீது பல தடவைகள்

படையெடுத்து தோல்வியடைந்தான். நேர்மையான போரில் எல்லாளனை வெல்லமுடியாது என்று உணர்ந்த துட்டகைமுனு, வஞ்சகப்போர் செய்ய முடிவு செய்தான். அதற்கு புத்த பிக்குகளின் உதவியை நாடினான். பிக்குகளை முன்னாள் செல்லுமாறு கூறி அவர்களுக்கு பின்னால் தனது படையுடன் சென்றான். பிக்குகளைக் கண்ட எல்லாளன், ஆயுதங்களைப் பயன்படுத்த வேண்டாம் என்று தனது வீரர்களுக்குக் கட்டளையிட்டான். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி துட்டகைமுனுவின் படைகள் முன்னேறி வெற்றிபெற்றன.இறுதியில் துட்டகைமுனு, எல்லாளனை தனிச் சமருக்கு அழைத்தான். இருவரும் யானைகளில் ஏறி ஈட்டிகளைக் கொண்டு போர் செய்தனர். ஒரு தருணத்தில் எல்லாளனின் யானையின் கால் சறுக்கியது. எல்லாளன் நிலைகுலைந்தான். அவ்வேளையில் யுத்த தர்மங்களுக்கு மாறாக, துட்டகைமுனு எல்லாளனின் நெஞ்சில் ஈட்டியைப் பாய்ச்சிக் கொன்றான். எழுப்பதினான்கு வயது நிரம்பிய எல்லாளனை, சுமார் இருபத்திநான்கு வயதேயான துட்டகைமுனுவால் நேர்மையாக வெல்ல முடியவில்லை.

**ராஜராஜனும் ராஜேந்திரனும்**

கி. பி. 895ஆம் ஆண்டில் தென்னிந்தியாவிலுள்ள தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ராஜராஜ சோழன் ஆட்சி செய்தான். மிகுந்த பராக்கிரமம் உள்ள அரசனான இவன் பலம் வாய்ந்த தரைப்படையையும், கடற்படையையும் அமைத்தான். முதலில் தற்போதைய தமிழ்நாடு முழுவதையும் தனது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான். பின்பு ஆந்திரா, கலிங்கம், கர்நாடகாவின் ஒரு பகுதியையும் இலங்கையையும் கைப்பற்றி தனது ஆட்சியை விரிவுபடுத்தினான். பின் தனது கடற்படையைப் பயன்படுத்தி மாலைதீவுகளையும் கைப்பற்றி ஆட்சி செய்தான்.
கி. பி. 1012ஆம் ஆண்டில், ராஜராஜனின் மகன் ராஜேந்திரன் இணை அரசனாக முடிசூட்டப்பட்டான். சோழப்பேரரசை மேன்மேலும் விரிவுபடுத்திய பெருமை ராஜேந்திர சோழனையே சேரும். கங்கை நதி பாய்கின்ற வங்காளதேசத்ததைக் கைப்பற்றி 'கங்கை கொண்ட சோழன்' என்று புகழ் பெற்றான். பின்பு பலம் வாய்ந்த தனது கடற்படையைப் பயன்படுத்தி இந்தோனேசிய, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளையும் கைப்பற்றினான். இந்தோனேசியாவில் பாலம்பங் என்ற இடத்திலுள்ள கடாரம் என்ற இடத்தைக் கைப்பற்ற

ராஜேந்திரன் மேற்கொண்ட போர் வரலாற்றில் சிறப்பித்துக் கூறப்படுகிறது. இதனால் 'கடாரம் கொண்ட சோழன்' என்றும் புகழப்பட்டான்.

இவ்வாறாக, இலங்கையில் எல்லாளனும், தமிழகத்தில் ராஜராஜன் மற்றும் ராஜேந்திரனும் சிறந்த தமிழ் மன்னர்களாக விளங்கி இன்னமும் பண்டைத் தமிழர் வீரத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர்.

**நன்றி, வணக்கம்.**

**Eelam Tamil Association Victoria (Inc)**
(Established 1978)
**ஈழத் தமிழ்ச் சங்கம் விக்ரோறியா(இணை)**
(ஆரம்பம் 1978)
ABN: 91 718 368 666 Registration No.: A0007477N
P O Box 4337, Burwood East LPO, Burwood East, Victoria 3151, Australia

## இசைப் போட்டி

### மழலையர் பிரிவு: 4 - 5 வயதுக்கு உட்பட்டோர்

***(தொடங்கும் நேரம் மதியம்1:00 மணி)***

ஓடி விளையாடு பாப்பா
ஓடி விளையாடு பாப்பா
நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா

ஓடி விளையாடு பாப்பா
கூடி விளையாடு பாப்பா
ஒரு குழந்தையை வையாதே பாப்பா
ஓடி விளையாடு பாப்பா

பொய் சொல்ல கூடாது பாப்பா
என்றும் புறம் சொல்லலாகாது பாப்பா
பொய் சொல்ல கூடாது பாப்பா
தெய்வம் நமக்கு துணை பாப்பா
ஒரு தீங்கு வரமாட்டாது பாப்பா

காலை எழுந்த உடன் படிப்பு
பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு என்று
பழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா

---------------------------------- ------------------------------

## இசைப் போட்டி

பாலர் பிரிவு: 5 - 6 வயதுக்கு உட்பட்டோர்
(*தொடங்கும் நேரம் மதியம்1:00 மணி*)

1.**காக்கைச் சிறகினிலே நந்தலாலாநின்றன்-**
**கரியநிறந் தோன்றுதையே நந்தலாலா**;

2. **பார்க்கு மரங்கலெல்லாம் நந்தலாலா நின்றன்-**
**பச்சைநிறந் தோன்றுதையே நந்தலாலா**;

3. **கேட்கு மொலியிலெல்லாம் நந்தலாலா நின்றன் -**
**கீத மிசைக்குதடா நந்தலாலா**;

4.**தீக்குள் விரலைவைத்தால் நந்தலாலாநின்னைத்-**
**தீண்டுமின்பம்ந் தோன்றுதடா நந்தலாலா.**

----------------------------------- ------------------------------

Eelam Tamil Association Victoria (Inc)
(Established 1978)
ஈழத் தமிழ்ச் சங்கம் விக்ரோறியா(இணை)
(ஆரம்பம் 1978)
ABN: 91 718 368 666 Registration No.: A0007477N
P O Box 4337, Burwood East LPO, Burwood East, Victoria 3151, Australia

## <u>இசைப் போட்டி</u>

### ஆரம்பப் பிரிவு: 6 - 8 வயதுக்கு உட்பட்டோர்

***(தொடங்கும் நேரம் மதியம்1:00 மணி)***

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழிய வே!ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே!

தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே!

தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்!
வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி யே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே! வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!

--------------------------------- ------------------------------

## இசைப் போட்டி

**கீழ்ப் பிரிவு: 8 - 10 வயதுக்கு உட்பட்டோர்**
***(தொடங்கும் நேரம் மதியம்1:00 மணி)***

ராகம் : அமுத வர்ஷினி

தாளம் : ஆதி

இசை அமைப்பாளர்: யாழ்ப்பாணம் வீரமணி ஐயர்

**பல்லவி**

என் முகம் பாராயா ஷண்முகனே - என்றும்
உன் முகம் கண்டிட உருகி தவித்தேன் ஐயா

**அனுபல்லவி**

நின் முகம் அன்றே இந்த நிலத்தில் துணையும் உண்டோ
பன்னிரு கையானே பார்வதி மைந்தனே

**சரணம்**

அருள் அமிர்த மழையே அகப்பையினில் பொழியும்
ஆன்ம வயல் செழிக்கும் அன்பர் வினை அழியும்
திருவாளர் நெல்லை நகர் திரு முருகையா உந்தன்
திருவடி நம்பினேன் திக்கு வேறில்லை ஐயா.

---------------------------------- ------------------------------

## இசைப் போட்டி

மத்திய பிரிவு: 10 - 12 வயதுக்கு உட்பட்டோர்

(*தொடங்கும் நேரம் மதியம்1:00 மணி)*

## ரகம் : மதுவந்தி

## தாளம் : ஆதி

## இசை அமைப்பாளர்: பாபநாசம் சிவம்

## பல்லவி

கண்ட நாள் முதலாய் காதல் பெருகுதடி
கையினில் வேல் பிடித்த கருணை சிவ பாலனை
கண்ட நாள் முதலாய் காதல் பெருகுதடி

## அனுபல்லவி

வண்டிசை பாடும் எழில் வசந்த பூங்காவில்
வந்து சுகம் தந்த காந்தனே என் காந்தனே

## சரணம்

நீல மயில் தனை நெஞ்சமும் மறக்கவில்லை
நேசம் உடன் கலந்த பாசமும் கலையவில்லை
கோல குமரன் மன கோயிலில் இருந்து விட்டான்
குறு நகை தனை காட்டி நறு மலர் சூடி விட்டான்

----------------------------------- ------------------------------

## இசைப் போட்டி

**மேற் பிரிவு: 12 - 14 வயதுக்கு உட்பட்டோர்**
***(தொடங்கும் நேரம் மதியம்1:00 மணி)***

## சபாபதிக்கு வேறு தெய்வம்

ராகம்:- ஆபோஹி
தாளம்:-ரூபகம்

பல்லவி
சபாபதிக்கு வேறு தெய்வம் சமானமாகுமா
தில்லை சபாபதிக்கு வேறு தெய்வம்
சமானமாகுமா( சபாபதிக்கு)

அனுபல்லவி
கிருபாநிதி இவரைப்போல கிடைக்குமோ
இந்த தரணி தன்னில் (சபாபதிக்கு..)

சரணம்
ஒருதரம் சிவசிதம்பரம் என்றால் சொன்னால்
போதுமே
பரகதிக்குயடைய வேறே புண்ணியம்
செய்யவேண்டாமே
அரிய புலையர் மூவர் பதம் அடைந்தார்
என்றே புராணம் சொல்லக்கேட்டோம்
கோபலகிருஷ்ணன் பாடும் (சபாபதிக்கு)

----------------------------------- -------------------------------

**இசைப் போட்டி**

**அதிமேற் பிரிவு : 14 வயதுக்கு மேற்பட்டோர்**

**(Group Performance)**

***(தொடங்கும் நேரம் மதியம் 1:00 மணி)***

## கற்பக வல்லி நின்

ராகம் ராகமாலிகா
கற்பக வல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்
நற்கதி அருள்வாய் அம்மா! (கற்பக வல்லி)
பற்பலரும் போற்றும் பதி மயிலாபுரியில்
சிற்பம் நிறைந்த உயர் சிங்காரக் கோயில் கொண்ட
(கற்பக வல்லி)

நீ இந்த வேளைதன்னில் சேயன் எனை மறந்தால்
நான் இந்த நாநிலத்தில் நாடுதல் யாரிடமோ
ஏன் இந்த மௌனம் அம்மா ஏழை எனக்கருள
ஆனந்த பைரவியே ஆதரித்தாளும் அம்மா!
(கற்பக வல்லி)

எல்லோர்க்கும் இன்பங்கள் எழிலாய் இரங்கி என்றும்
நல்லாசி வைத்திடும் நாயகியே நித்ய
கல்யாணியே கபாலி காதல் புரியும் அந்த
உல்லாசியே உமாஉனை நம்பினேன் அம்மா!
(கற்பக வல்லி)

நாகேஸ்வரி நீயே நம்பிடும் எனைக் காப்பாய்
வாகீஸ்வரி மாயே வாராய் இது தருணம்
பாகேஸ்ரீ தாயே பார்வதியே இந்த
லோகேஸ்வரி நீயே உலகினில் துணையம்மா!
(கற்பக வல்லி)

அஞ்சன மை இடும் அம்பிகை எம்பிரான்
கொஞ்சிக் குலாவிடும் வஞ்சியே உன்னிடம் - அருள்
தஞ்சம் என அடைந்தேன் தாயே உன் சேய் நான்
ரஞ்சனியே ரட்சிப்பாய் கெஞ்சுகிறேன் அம்மா!
(கற்பக வல்லி)

# ஈழத் தமிழ்ச் சங்கம் - முத்தமிழ் விழாப் போட்டி 2018

## நேர்முக-கலந்துரையாடல் போட்டிக்கான விபரங்கள்

போட்டி நாள் : **ஞாயிற்றுக்கிழமை**, (13.05.2018) **மதியம்** 1:00மணி - மாலை 6:00மணி

போட்டி இடம் : **Wesley College, 620, High Street Road, Glen Waverley, 3150 (Melway Ref 62 A12)**

**விதிமுறைகள்:**

1. இப்போட்டியில் அவுஸ்திரேலியாவில், பிரதான பாடசாலைகளில் கல்வி கற்கும் 12 வயதுக்கும் 18 வயதுக்கும் உட்பட்ட சிறுவர்கள் யாவரும் பங்குபற்றலாம்.
2. போட்டிகளில் பங்குபற்றுவதற்கென்று தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்ப படிவங்களிலேயே விண்ணப்பம் செய்தல் வேண்டும்.
3. போட்டியாளர் கீழே தரப்பட்டுள்ள 5 தலைப்புகளில் ஒன்றை தமது கலந்துரையாடலுக்கு தெரிவு செய்துகொள்ளலாம்
4. கலந்துரையாடல் 5 நிமிடத்திற்க்கு குறையாமலும், 7 நிமிடத்திற்க்கு கூடாமலும் இருத்தல் வேண்டும்
5. போட்டியாளர் விரும்பினால், எடுத்துக்கொண்ட தலைப்பைப் பற்றி சிறு விளக்கம் கொடுக்கலாம் (2 நிமிடத்திற்குள்)
6. போட்டியாளர் நடுவர்களை அணுகி அவர்களை வாழ்த்தும் போதே போட்டி ஆரம்பமாகிறது என்பதை கவனத்தில் கொள்ளவும்
7. கலந்துரையாடல் முழுவதும் தமிழில் இருக்க வேண்டும்.
8. **கலந்துரையாடல் தலைப்புகள்**:
    - "எனது பாடசாலை வாழ்க்கை"
    - "எனது குடும்பம்"
    - "பாடசாலை நேரத்திற்கு வெளியே எனது பொழுது போக்கு"
    - "எனக்கு தமிழின்மேல் உள்ள ஆர்வம்"
    - "*நான் அறிந்த* தமிழ் கலாச்சாரம்"

Eelam Tamil Association Victoria (Inc)
(Established 1978)
ஈழத் தமிழ்ச் சங்கம் விக்ரோறியா(இணை)
(ஆரம்பம் 1978)

ABN: 91 718 368 666 Registration No.: A0007477N
P O Box 4337, Burwood East LPO, Burwood East, Victoria 3151, Australia

# ஈழத் தமிழ்ச் சங்கம் - முத்தமிழ் விழாப் போட்டி 2018

## கட்டுரைப் போட்டிக்கான விபரங்கள்

போட்டி நாள் : **ஞாயிற்றுக்கிழமை** 13.05.2018 மதியம் 1:00மணி - மாலை 6:00மணி

போட்டி இடம் : **Wesley College, 620, High Street Road, Glen Waverley, 3150**

**விதிமுறைகள்:**

1. இப்போட்டிகளில் அவுஸ்திரேலியாவில் பிரதான பாடசாலைகளில் கல்வி கற்கும் 8 வயதுக்கும் 18 வயதுக்கும் உட்பட்ட சிறுவர்கள் யாவரும் பங்குபற்றலாம்.

2. போட்டிகளில் பங்குபற்றுவதற்கென்று தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்ப படிவங்களிலேயே விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

3. போட்டியாளரகள் கீழே தரப்பட்டுள்ள வயது அடிப்படையில் உரிய தலைப்பைத் தெரிவு செய்து தங்களை தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.

4. போட்டிகான பிரிவுகளும் உரிய தலைப்புகளும்:

| வயது | தலைப்பு | சொற்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 6 – 10 | எனது குடும்பம் | 75 இருந்து 100 சொற்கள் |
| 10 - 12 | தமிழ் பண்டிகைகள் (ஏதாவது ஒன்று) | 100 இருந்து 150 சொற்கள் |
| 12 - 14 | எனது மதிப்புக்குரிய தமிழ் பெரியார் (விருப்பமான ஒருவரைப் பற்றி) | 150 இருந்து 200 சொற்கள் |
| 14 - 16 | நான் அண்மையில் மேற்கொண்ட சுற்றுலா பயணம் | 200 இருந்து 250 சொற்கள் |
| 16 வயதுக்கு மேற்பட்டவர்கள் | வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் தமிழ் படிக்க வேண்டுமா? | 250 இருந்து 350 சொற்கள் |

ஈழத் தமிழ்ச் சங்கம் - முத்தமிழ் விழாப் போட்டி - 2018

# தேர்வுப் படிமானம்

## பேச்சு, இசைப் போட்டிகள்

### பட்டுப் போட்டி

| படிமானம் | இராகம் | தாளம் | பாவம் | பாடிய விதம் (முன்னிலைப்படுத்துகை) | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| புள்ளிகள் | 30 | 30 | 20 | 20 | 100 |

### பேச்சுப் போட்டி

| படிமானம் | மனனம் | உச்சரிப்பு தொனி | நிலை முகபாவம் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| புள்ளிகள் | 40 | 30 | 30 | | 100 |

### கட்டுரைப் போட்டி

| படிமானம் | முகவுரை | கட்டுரையின் உள்ளடக்கம் | முடிவுரை | எழுத்துப் பிழையின்மை | எழுத்துறுப்பு | சொற்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| புள்ளிகள் | 10 | 40 | 15 | 15 | 10 | 10 | 100 |

### கலந்துரையாடல் போட்டி

| படிமானம் | அறிமுகப் படுத்தல் | கேள்விக்கேற்ற பதிலளித்தல் | ஆங்கிலம் கலவாமல் பேசுதல் | இலக்கணப் பிழையின்மை | முகபாவம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| புள்ளிகள் | 10 | 50 | 15 | 15 | 10 | 100 |

Eelam Tamil Association Victoria (Inc)
(Established 1978)
ஈழத் தமிழ்ச் சங்கம் விக்ரோறியா(இணை)
(ஆரம்பம் 1978)
ABN: 91 718 368 660 Registration No.: A0007477N
P O Box 4337, Burwood East LPO, Burwood East, Victoria 3151, Australia

# ஈழத் தமிழ்ச் சங்கம் - முத்தமிழ் விழா 2018

## பேச்சு, இசை கட்டுரை உரையாடல் போட்டிகளுக்கான விண்ணப்பப் படிவம்

போட்டி நாள் : ஞாயிற்றுக்கிழமை 13.05.2018 மதியம் 1:00மணி - மாலை 6:00மணி
போட்டி இடம; : Wesley College, 620, High Street Road, Glen Waverley, 3150 (Melway Ref 62 A12)

பங்குபற்றுபவரின் முழுப் பெயர்(தமிழில்):____________________

**Participant's Family Name:** ----------------------------------------------------------------------

**Participant's Given Name:** ----------------------------------------------------------------------

**Sex**: Female / Male

பிறந்த திகதி **(Date of Birth)**: ___ / ___ / ______

**Day School :** ----------------------------------------------------------------

**Year Level in Day School :** ----------------------------------------------------------------

**Email Address :** ----------------------------------------------------------------

**Mobile Ph.** : ------------------------------------------------

**Home Ph.** : ------------------------------------------------

**Address**: ----------------------------------------------------------------------------------------------------
----

**Suburb :** ----------------------------------------------------------------

**Postcode**: -------------------------

Eelam Tamil Association Victoria (Inc)
(Established 1978)
ஈழத் தமிழ்ச் சங்கம் விக்ரோறியா(இணை)
(ஆரம்பம் 1978)
ABN: 91 718 368 660 Registration No.: A0007477N
P O Box 4337, Burwood East LPO, Burwood East, Victoria 3151, Australia

## பங்குபற்றும் போட்டி:

பேச்சு ------------------------ ☐

இசை ------------------------ ☐

கட்டுரை ------------------------ ☐

நேர்முக கலந்துரையாடல் -- ☐

## பங்குபற்றும் பிரிவு:

மழலையர் பிரிவு - 5 வயதுக்கு கீழ்ப்பட்டோர்------------ ☐

பாலர் பிரிவு: 5 - 6 வயதுக்கு உட்பட்டோர் ----------------- ☐

ஆரம்ப பிரிவு: 6 - 8 வயதுக்கு உட்பட்டோர்-------- ☐ ---

கீழ்ப் பிரிவு: 8 - 10 வயதுக்கு உட்பட்டோர் -------- ☐ --

மத்திய பிரிவு: 10 - 12 வயதுக்கு உட்பட்டோர் ------- ☐ ---

மேற் பிரிவு: 12 - 14 வயதுக்கு உட்பட்டோர் -------- ☐ --

அதி மேற் பிரிவு: 14 வயதுக்கு மேற்பட்டோர் ----- ☐ ---

**மேற்குறிப்பிட்ட விபரங்கள் யாவும் உண்மையென இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.**

பெற்றோர் கையொப்பம்: ---------------------------------------------------- திகதி:----------------------------

தமிழ்ப் பாடசாலை மூலமாக விண்ணப்பிருந்தால் :

தமிழ்ப் பாடசாலையின் பெயர்: -------------------------------------------------------------------------------------

***விண்ணப்பக் கட்டணமாக 10.00 பெற்றுக்கொண்டேன்***

பாடசாலை இணைப்பாளர் கையொப்பம்: ------------------------------------ திகதி: ----------------

************************வாழ்க தமிழ்********************